1993 ஏப்ரல் 30]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே, அது சுண்டக்காமுத்தூர். அதற்கு பெரிய மருத்துவமனை அமைக்க வேண்டுமா என்பதைப்பற்றி ஆய்வு செய்த பின்னாலே முடிவெடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண். 547, திரு. என். ஆர். ராஜேந்திரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

547—

மானியம் ஆடூர் கிராமத்திற்குத் துணைச் சுகாதார நிலையம் அமைத்தல்

*14692— திரு. என். ஆர். ராஜேந்திரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

காட்டுமன்னார்கோவில் தொகுதி மானியம் ஆடூர் கிராமத்திற்கு துணைச் சுகாதார நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

இங்கே ஒரு துணைச் சுகாதார நிலையம் அமைப்பதைப்பற்றி அரசு ஆய்வு செய்யும்.

திரு. என். ஆர். ராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த கிராமம் ஏறத்தாழ 3000 மக்கள் தொகை கொண்டது. இந்தக் கிராமத்தைச் சுற்றி பல பெரிய கிராமங்கள் இருக்கின்றன. ஏறத்தாழ 5 கிலோ மீட்டர் சுற்றளவிற்கு ஒரு துணைச் சுகாதார நிலையம்கூட கிடையாது. அந்த மக்கள் மருத்துவ வசதிக்காக மருத்துவர்களை அணுக வேண்டுமென்றால், காட்டுமன்னார்கோவில் 7 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது. சிதம்பரம் 20 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது. ஆகவே, இந்த மக்களின் பல்லாண்டுகாலக் கோரிக்கையாக இது இருப்பதால், இது எவ்வளவு விரைவாகச் செய்யப்படும் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[1993 ஏப்ரல் 30

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அங்கே சுகாதார நிலையம் தான் கேட்கிறார் என்பதிலே கருத்து வேறுபாடு இல்லை என்று கருதுகிறேன். காரணம், அவருடைய கேள்வியை, ஆரம்ப சுகாதார நிலையம் கேட்பதாக துறையினுடைய சார் பாகத் தவறாகப் புரிந்து, பதில் அனுப்பியிருந்தார்கள். எனவே, அங்கே, துணைச் சுகாதார நிலையம் வேண்டுமென்று சொன்னால், இனிமேல்தான் ஆய்விற்கு எடுத்துக் கொள்ள வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கேள்வியை பார்த்த பின்னாலேதான் அங்கே துணை சுகாதார நிலையம் தேவை என்று சொன்னால், அதை ஆய்விற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அதிகாரிகளிடம் நான் நேற்றைய தினம் தெரிவித்திருக்கிறேன். அதை ஆய்வு செய்து, அங்கே தேவை என்று சொல்லி அங்கே அமைப்பதற்கான நடவடிக்கையை எவ்வளவு விரைவாகச் செய்ய முடியுமோ அவ்வளவு விரைவாகச் செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 548, டாக்டர் மு. சீனியம்மாள், இருக்கையில் இல்லை; அவருக்குப் பதிலாக திரு. வி. கே. சின்னசாமி மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

548—

அவினாசி தாலுகாவிற்கு மண்டலப் போக்குவரத்து அலுவலகம்.

*10462— டாக்டர் மு. சீனியம்மாள்.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி தாலுகாவிற்கு மண்டலப் போக்குவரத்து அலுவலகம் அமைத்துத் தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.